Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ்Mirror

www.tamilmirror.lk

MONDAY, JULY 22 2024

திங்கட்கிழமை ஜூலை 22, 2024 | ஒளி: 10 கதிர் 299 | பக்கம்:06 | நகரப்பதிப்பு★ | FREE

## ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் பொது வேட்பாளர்

# இன்று ஒப்பந்தம்



**கடந்த காலங்களில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தல்களில் தமிழ் மக்கள் எவருக்கும் வாக்களித்தும் எவ்விதமான பயனும் இல்லை**

■ எஸ்.தில்லைநாதன்

னாதிபதித் தேர்தலில் தமிழர் தரப்பில் இருந்து பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்துவதற்கான உடன்படிக்கையொன்று திங்கட்கிழமை (22) கைச்சாத்திடப்படவுள்ளது.

தமிழ் சிவில் சமூகத்தினருக்கும் தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகளுக்கு இடையிலும் இந்த உடன்படிக்கை யாழ்ப்பாணத்தில் வைத்து கைச்சாத்திடப்படவுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த காலங்களில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தல்களில் தமிழ் மக்கள் எவருக்கும் வாக்களித்தும் எவ்விதமான பயனும் இல்லை என்று தமிழ்க் கட்சியினரும் சிவில் சமூகத்தினரும் பல்வேறு குற்றச்சாட்டுக்களை முன்வைத்துள்ளனர்.

தொடர்ச்சி P2

## ஐஸுக்கு எய்ட்ஸ்



ஐஸ் போதைப்பொருளுடன் கைது செய்யப்பட்ட 41 வயதுடைய நபருக்கு எச்.ஐ.வி. தொற்று இருப்பது சுகாதாரத் துறையினர் மேற்கொண்ட விசாரணையில் தெரியவந்துள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

கண்டி-தொடம்வல பிரதேசத்தைச் சேர்ந்த இவர் கேகாலை பிரதேசத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார். சந்தேக நபர் எச்.ஐ.வி தொற்றுக்கு உள்ளானவர் என பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார்.

சந்தேகநபரின் வாக்குமூலத்தின் உண்மையை உறுதிப்படுத்திக்கொள்வதற்காக கேகாலை பொலிஸாரினால் அழைக்கப்பட்ட அறிக்கையில், அதன் உண்மை உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் ஐஸ் போதைப்பொருள் கடத்தல் மற்றும் பாவனைக்குப் பழக்கப்பட்டவர் எனவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

## “24க்கு 24 சமுதாய பல்கலைக்கழகங்கள்”



அறிவை மையமாகக் கொண்ட பொருளாதாரத்தை கட்டியெழுப்ப, கற்றோர் நிறைந்த புத்திஜீவிகள் சமூகத்தை எமது உருவாக்க வேண்டிய தேவை காணப்படுகிறது. இதற்கு எமது நாட்டில் 24 மாவட்டங்களிலும் 24 திறந்த சமுதாய பல்கலைக்கழகங்களை ஆரம்பிக்க வேண்டும். இலங்கையில் ஏற்கெனவே திறந்த பல்கலைக்கழகங்கள் அமைந்து காணப்படுகின்றன என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## காணிகள் தராமையால் வீட்டுத் திட்டத்தில் தடை

**த.மு.கூ.யினரிடம் இந்தியத் தூதர் தெரிவிப்பு**



வீடுகளைக் கட்டுவதற்கு உரிய காணிகளை இலங்கை தரப்பு, இன்னமும் விடுவிக்காமையால் வீடுகளை நிர்மாணிப்பதில் தாமதம் ஏற்பட்டுள்ளது என்றும், இந்த விவகாரத்தில், இந்தியத் தரப்பில் எவ்வித தாமதமும் இல்லை எனவும் இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா, தமிழ் முற்போக்கு கூட்டணி தூதுக்குழுவிடம் தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

## “தமிழ்த் தேசிய உணர்ச்சி என் மாணவனுக்கு இல்லை”

தமிழரசுக் கட்சியில் இருக்கிற என்னுடைய அருமை மாணவன் பலவிதமான தகைமைகளைக் கொண்டிருந்தாலும், தமிழ்த் தேசிய உணர்ச்சி அவருக்கு இல்லை. அவர் எல்லாவற்றையும் மூளையினால் பார்ப்பாரே ஒழிய உணர்வினாலோ உணர்ச்சியினாலோ பார்க்கக் கூடியவர் அல்லர் என தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளர் நாயகமும் பாராளுமன்ற உறுப்பினருமான சி.வி.விக்கினேஸ்வரன் தெரிவித்தார்.

தமிழ் மக்கள் கூட்டணியின் தேசிய மாநாட்டிற்கு தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ஸ்ரீதரனை அழைத்திருக்கிற நிலைமையில், எதிர்காலத்தில் அவருடன் சேர்ந்து பயணிப்பதற்குச் சாத்தியங்கள் இருக்கிறதா என ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும் போதே விக்கினேஸ்வரன் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

தொடர்ச்சி P2



### இலங்கை மாணவர்கள்

## பங்களாதேஷில் பாதுகாப்பாக உள்ளனர்

பங்களாதேஷில் ஏற்பட்டுள்ள மோதல் நிலைமை காரணமாக அந்நாட்டில் உள்ள இலங்கை மாணவர்களின் பாதுகாப்பு தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளதாக வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

இலங்கை மாணவர்கள் 50இற்கும் மேற்பட்டோர் பங்களாதேஷில் மூன்று பல்கலைக்கழகங்களில் கல்விகற்பதாக அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

தொடர்ச்சி P2



### சாவகச்சேரி வைத்தியசாலை பிரச்சினைகளை ஆராய

## 15 அங்கத்தவர்கள் அடங்கிய அபிவிருத்தி குழு நியமனம்



■ புகஜிந்தன்

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் பிரச்சினைகள் தொடர்பான ஆக்கப்பூர்வமான கலந்துரையாடல் ஞாயிற்றுக்கிழமை (21) முன்னெடுக்கப்பட்டது.

வைத்தியர் அர்சுனாவினால் முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுக்கள் தொடர்பாகவும் அதற்கான தீர்வு தொடர்பாகவும், அவர் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கள் தொடர்பாகவும், வைத்தியர் அர்சுனாவை மீண்டும் சாவகச்சேரி வைத்திய சாலைக்கு வைத்திய அத்தியட்சகராக நியமிப்பதற்கான ஏற்பாடுகள் தொடர்பாக இதன்போது ஆராயப்பட்டது.

குறித்த கலந்துரையாடலில் கலந்துகொண்ட சமூக மட்ட அமைப்பினர், சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் உள்ள குறைபாடுகள் என வைத்தியர் அர்ச்சுனா முன்வைத்த குற்றச்சாட்டுகள் உட்பட 16 குற்றச்சாட்டுகளை எழுத்துமூலம் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் வழங்கினர்.

தொடர்ச்சி P2

## கிளப் வசந்த படுகொலை: 21 வயதான பெண் கைது

**48 மணிநேர தடுப்புக்காவலுக்கு அனுமதி**



அத்துருகிரிய பச்சை குத்தும் மையத்தில் இருவரைக் கொன்று நால்வரைப் படுகாயப்படுத்த உதவியதற்காக 21 வயதுடைய பெண்ணொருவர் கைது செய்யப்பட்டதாக மேல் மாகாண தெற்கு மாவட்ட குற்றப்பிரிவு தெரிவித்துள்ளது.

சந்தேக நபரான அந்தப் பெண், மிரிஸ்ஸ பொல் அடு மோதர பிரதேசத்தில் உள்ள வீடொன்றில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

தொடர்ச்சி P2

## மட்டக்களப்பில் மதபோதகர் கைது

■ கனகராசா சரவணன்

சம்மாந்துறை நீதவான் நீதிமன்றத்தில் 7 பிடி விறாந்து பிறப்பிக்கப்பட்ட தலைமறைவாகி இருந்த மதபோதகர் ஒருவரை ஞாயிற்றுக்கிழமை (21) மட்டக்களப்பில் வைத்து கைது செய்துள்ளதாக மட்டு. தலைமையக பொலிஸார் தெரிவித்தனர்.

மட்டு. தலைமையக பொலிஸ் பிரிவிலுள்ள தேவாலயம் ஒன்றில் மத போதகராகச் செயற்பட்ட இவர், வெளிநாடு அனுப்புவதாகக்கூறி பணமோசடி செய்தார் என்ற குற்றச்சாட்டின் கீழ் சம்மாந்துறை நீதவான் நீதிமன்றில் வழக்கு தாக்குதல் செய்யப்பட்டிருந்தது.

தொடர்ச்சி P2

## செந்திலின் கோரிக்கையால் ஆனந்தமடைந்தார் ஆனந்தகுமார்

**ஜனாதிபதியையும் நம்புகின்றார்**



இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவரும், கிழக்கு மாகாண ஆளுநருமான செந்தில் தொண்டமான் முன்வைத்துள்ள கோரிக்கை நியாயமானது என ஜனாதிபதியின் கீழ் இயங்கும் தொழிற்சங்க முடிவுகளை எடுக்கும் மூன்றுபேர் கொண்ட குழுவின் உறுப்பினரும், ஐக்கிய தேசியக் கட்சியின் இரத்தினபுரி மாவட்ட அமைப்பாளருமான சுப்பையா ஆனந்தகுமார் தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

## மரணத்தை ஏற்படுத்தும் வீதியாக மாறிய ஏ-9 வீதி

■ புகஜிந்தன்

யாழ்ப்பாணம் அரியாலை சந்தி, ஏ-9 வீதியில் நீண்ட தூரத்துக்கு மண் கொட்டப்பட்டு காணப்படுவதால் பயணிகள் மிகுந்த சிரமத்தின் மத்தியிலும் பயத்தின் மத்தியிலும் பயணத்தை மேற்கொள்கின்றனர்.

குறித்த வீதியில் மண் கொட்டப்பட்டு காணப்படுகின்றது. சனிக்கிழமை(20) இரவே இவ்வாறு மண் கொட்டப்பட்டுள்ளது. மண் கடத்தல்காரர்களை பொலிஸார் துரத்தியவேளை அவர்கள் வீதியில் மண்ணை கொட்டிவிட்டு சென்றிருக்கலாம் என சந்தேகிக்கப்படுகிறது.

தொடர்ச்சி P2



PAGE 1 தொடர்ச்சிகள்

# ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் பொது வேட்பாளர் இன்று ஒப்பந்தம்

இதனால் தமிழ் மக்களின் நிலைமையையும், தமிழ் மக்களின் பிரச்சினைகள், தேவைகளை வெளிப்படுத்தும் வகையிலும் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் எந்தவொரு சிங்கள வேட்பாளருக்கும் ஆதரவை வழங்காது தமிழர் தரப்பில் இருந்து பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்துவதற்கான நடவடிக்கைகள் அண்மைக்காலமாக சிவில் சமூகத்தினராலும் அரசியல் கட்சிகளாலும் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வந்தன.

இந்நிலையில், இதற்குப் பல்வேறு அமைப்புகளும் பல்வேறு கட்சிகளும் ஆதரவு வழங்கியுள்ள நிலையில், இதன் அடுத்த கட்டமாகத் தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகளுக்கும், சிவில் சமூகத்தினருக்கும் இடையில் முதலாவதாக ஒப்பந்தமொன்று கைச்சாத்திடப்படவுள்ளது.

இவ்வாறு இரு தரப்பினர்களுக்கும் இடையிலும் பல்வேறு விடயங்களை உள்ளடக்கி ஒப்பந்தம் கைச்சாத்தாகியதைத் தொடர்ந்து தமிழ்ப் பொது வேட்பாளர் தெரிவு உள்ளிட்ட ஏனைய அனைத்து விடயங்கள் தொடர்பிலும் அடுத்த கட்ட நடவடிக்கைகள் மிகத் தீவிரமாக முன்னெடுக்கப்படவுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது.

# “24க்கு 24 சமுதாய பல்கலைக்கழகங்கள்”

இதில் ஒரு மாணவராக, திறந்த சமுதாய பல்கலைக்கழகங்களை மாவட்ட மட்டங்களில் நிறுவி, உயர் கல்விக்கான பிரவேசத்தை அதிகரிக்க வேண்டும் என கருதுகிறேன். இதன் காரணமாகக் கற்றறிந்த புத்திஜீவிகள் சமூகத்தில் அதிகரிக்கும் வாய்ப்பு ஏற்படும் என்றும் தெரிவித்துள்ளார்.

பிரபஞ்சம் தகவல் தொழில்நுட்ப வேலைத்திட்டத்தின் கீழ், கண்டி, உடுநுவர, தவுல்கல, வெலிகல்ல உடு அலுதெனிய மகா வித்தியாலயத்திற்கு வழங்கி வைக்கும் நிகழ்வு ஜூலை 21 ஆம் திகதி இடம்பெற்றது. இந்நிகழ்வில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

மேலும், படித்த புத்திஜீவிகளும் அறிஞர்களும் நிபுணத்துவம் வாய்ந்தவர்களும் அதிகளவில் உருவாகுவார்கள். இதன் மூலம் பலரும் உயர்கல்விக்கான வாய்ப்பைப் பெறுவதுடன், உயர் கல்வித் தகைமை, திறமைகளுடன், கூடிய சம்பளம் பெறும் வேலைக்குச் செல்லக்கூடிய தலைமுறை உருவாகும். இதனால் வாழ்நாள் முழுவதுமான கற்றல் செயல்முறைக்கு ஊக்கத்தை ஏற்படுத்தலாம்.

இந்த சமுதாய திறந்த பல்கலைக்கழக எண்ணக்கரு நகர்ப்புற மற்றும் கிராமப்புற அபிவிருத்திக்கு உதவும் காரணியாக அமைந்து காணப்படும். இதன் மூலம், புதிய பட்டப்படிப்புகள், புதிய கற்றல் விருப்பார்வங்கள் சகலருக்கும் கிட்டும்.

இங்கு சமூக பங்கேற்பு கற்றல் அதிகரிக்கும். ஸ்மார்ட் தொழிலைப் பெற்றுக்கொள்ள வாய்ப்புக் கிடைக்கும். பொருளாதார அபிவிருத்திக்கு உறுதுணையாக இருக்கும். அதனடிப்படையில் ஐக்கிய மக்கள் சக்தி அரசாங்கத்தில் திறந்த சமுதாய பல்கலைக்கழகம் என்ற எண்ணக்கருவை அரச மற்றும் தனியார் கூட்டாண்மை ஊடாக ஆரம்பித்து, சமூகத்தில் படித்தவர்களையும் புத்திஜீவிகளையும் உருவாக்கும் பாரிய கல்வி அபிவிருத்தித் திட்டத்திற்கு வழிவகுப்பேன்.

இந்த சமுதாய திறந்த பல்கலைக்கழகங்களால், நாட்டின் மாணவர்களினதும் இளைஞர்களினதும் உயர் கல்விக்கான ஆர்வத்தையும் பிரவேசத்தையும் உந்துதலையும் அதிகரிக்கும். இதன் மூலம் உயர் திறன்களைக் கொண்ட தொழிலாளர் படையை உருவாக்கலாம். வயது மூப்பானவர்களும், வயது வித்தியாசமின்றி, கல்வியில் பட்டம் பெற வழிவகை பிறக்கும்.

இதன் மூலம், சிறந்த பணியாளர்கள் உருவாகுவார்கள். உயர் கல்வியறிவு மட்டத்தை எம்மால் அடைய முடியுமாக இருக்கும். இவ்வாறான நிலை உருவாகும் போது, எந்த அரசியல்வாதியாலும் நாட்டு மக்களை ஏமாற்ற முடியாத நிலை ஏற்படும். நாட்டின் பெரும்பான்மையான மக்களுக்கு நாட்டின் சட்டவாக்க நடைமுறைகள் ஏற்பாடுகள் குறித்த புரிதல் இல்லாததால், உயர் வர்க்கத்தினர் சொல்வதை அவ்வாறே நம்பி ஏமாந்து போகும் அடிமை கலாசாரம் காணப்படுகிறது. இதில் இருந்து விடுபட வேண்டும். நாட்டின் உயர் வர்க்கத்தினரை விட மக்கள் உண்மையைப் புரிந்துகொள்ளும் தலைமுறையை உருவாக்க வேண்டும் என

ஆங்கிலம், சீனம் மற்றும் ஹிந்தி ஆகிய மொழிகளையும் நாம் கற்றுக்கொள்ள வேண்டும். இந்த மொழிகளும் கற்பிக்கப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டில் நாம் இருந்து வருகிறோம். இந்த இரண்டு நாடுகளும் உலகின் மிகப்பெரிய தொழிலாளர் சந்தையை தன்னகத்தே கொண்டுள்ளன. எனவே, நாம் இந்த தொழிலாளர் சந்தையை இலக்கு வைத்து செயற்பட வேண்டும். எனவே எமக்கு மொழித் தேர்ச்சி தேவைப்படுகிறது. எதிர்கால நோக்குடனே இவை அனைத்தும் முன்னெடுக்கப்பட்டும் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

# பங்களாதேஷில் பாதுகாப்பாக உள்ளனர்

மாணவர்கள் மற்றும் அவர்களின் பெற்றோர்களுடன் தொடர்புகொண்டு தேவையான அறிவுறுத்தல்களை வழங்க இலங்கைக்கான பங்களாதேஷ் உயர்ஸ்தானிகராலயம் நடவடிக்கை எடுத்துள்ளது.

மாணவர்களின் பாதுகாப்பு மற்றும் நலன்கள் தொடர்பில் அவர்கள் கற்கும் பல்கலைக்கழகங்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, பங்களாதேஷில் நிலவும் குழப்ப நிலைமை காரணமாக இதுவரையில் இலங்கை மாணவர்களின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் ஏற்படவில்லை என வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

குறித்த மாணவர்கள் நாடு திரும்ப விரும்பினால், அதற்கான வசதிகள் செய்துகொடுக்கப்படும் என அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

பங்களாதேஷில் கடந்த 20 நாட்களாகப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ள நிலையில், நிலைமை தொடர்ந்தும் மோசமடைந்துள்ளதால் பங்களாதேஷ் முழுவதும் ஊரடங்கு சட்டம் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

# “தமிழ்த் தேசிய உணர்ச்சி என் மாணவனுக்கு இல்லை”

யாழில் சனிக்கிழமை(20 ) நடைபெற்ற ஊடக சந்திப்பின் போது அவர் மேலும் தெரிவித்ததாவது..

தமிழ்த் தேசிய கட்சிகள் என்ற முறையிலும் தமிழ்த் தேசிய உணர்வுகளைக் கொண்டவர்கள் என்ற முறையிலும் எங்களுக்கும் ஸ்ரீதரனுக்கும் இடையில் நெருங்கிய தொடர்பு இருக்கின்றது.

இந்த விதத்திலே என்னுடைய அருமை மாணவன் பலவிதமான தகைமைகளைக் கொண்டிருந்தாலும் தமிழ்த் தேசிய உணர்ச்சி அவருக்கு இல்லை. அவர் எல்லாவற்றையும் மூளையினால் பார்ப்பாரே ஒழிய உணர்வினாலோ, உணர்ச்சியினாலோ பார்க்கக் கூடியவர் அல்லர்.

அந்த விதத்தில் தமிழரசுக் கட்சியினுடைய தலைவராக சிறிதரன் வருவதைத் தான் நாங்கள் எதிர்பார்க்கின்றோம். அதனையே வரவேற்கின்றோம்.

ஆனால், இதுவரை காலமும் தமிழ்த் தேசியத்திற்குக் குரல் கொடுத்து வருகின்ற ஒருவர் என்ற முறையிலே அவரை நாங்கள் அழைத்திருக்கின்றோம். அதேபோன்று தான் பேராசிரியர் கணேசலிங்கத்தையும் அழைத்திருக்கிறோம்.

ஆகவே, தமிழ்த் தேசியத்தின் அடிப்படையிலே நாங்கள் முற்செல்ல வேண்டும் என்பதால் அதில் எந்தவிதமான மாற்றுக் கருத்திற்கும் இடமில்லை என்றார்.

# கிளப் வசந்த படுகொலை: 21 வயதான பெண் கைது

கிளப் வசந்த என்றழைக்கப்படும் வர்த்தகர் சுரேந்திர வசந்த பெரேரா, மற்றுமொரு நபரைப் படுகொலை செய்த சம்பவம் தொடர்பில், 7 பேர் கைது செய்யப்பட்டு, திங்கட்கிழமை (22) வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

அந்த நபர்களில் பச்சை குத்தும் மையத்தின் உரிமையாளர், கார், வேன் கொடுத்தவர்கள், எடுத்துச் சென்றவர்களும் அடங்குவர்.

இந்த கொலையானது டுபாயில் பதுங்கியிருக்கும் லோகு பட்டி மற்றும் கோனா கோவிலே சாந்தா ஆகிய இரு குற்றவாளிகளால் நேரடியாக நடத்தப்பட்ட திட்டமிட்ட கொலை என்று சொல்லப்படுகின்றது.

துப்பாக்கி தாரிகள் இருவரினால் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில், பிரபல பாடகர் சுஜீவா, கிளப் வசந்தாவின் மனைவி மற்றொரு ஆண், பெண் காயமடைந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, கிளப் வசந்த கொலைச் சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட 21 வயதான யுவதி கடுவலை பதில் நீதவான் முன்னிலையில் ஞாயிற்றுக்கிழமை(21) முன்னிறுத்தப்பட்டார். அவரை 48 மணி நேரம் தடுப்பு காவலில் வைத்து விசாரிக்க வேண்டுமென பொலிஸாரினால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்குப் பதில் நீதவான் அனுமதித்துள்ளார்.

# மட்டக்களப்பில் மதபோதகர் கைது

இந்த வழக்கிற்கு குறித்த மதபோதகர் ஆஜராகாமல் தலைமறைவாகி வந்துள்ளார். அவருக்கு எதிராக நீதிமன்றத்தால் 7 பிடி விறாந்துகள் பிறப்பிக்கப்பட்டிருந்தன. இந்நிலையில் மட்டக்களப்பு தலைமையக பொலிஸாருக்கு கிடைத்த தகவலுக்கு அமையத் தேவாலயத்துக்கு அருகில் வைத்து பொலிஸார், ஞாயிற்றுக்கிழமை (21) பிற்பகல் 2 மணியளவில் அவரை கைது செய்தனர்.

அவரை, நீதிமன்றில் திங்கட்கிழமை (22) முன்னிறுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

# செந்திலின் கோரிக்கையால் ஆனந்தமடைந்தார் ஆனந்தகுமார்

“பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு இடைக்கால கொடுப்பனவாக 5 ஆயிரம் ரூபாவை அரசாங்கம் வழங்க வேண்டுமென அக்கோரிக்கையை நிறைவேற்றுவதற்கு ஜனாதிபதி நிச்சயம் நடவடிக்கை எடுப்பார் என்ற நம்பிக்கை உள்ளது” என்றும் ஆனந்தகுமார் தெரிவித்துள்ளார்.

பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கு நாள் சம்பளமாக ஆயிரத்து 700 ரூபாய் வழங்கப்பட வேண்டுமெனத் தீர்மானம் எட்டப்பட்டிருந்தாலும் நீதிமன்ற நடவடிக்கை காரணமாக அது இடைநிறுத்தப்பட்டுள்ளது.

எனவே, தோட்டத் தொழிலாளர்களுக்கு நாள் சம்பளமாக ஆயிரத்து 700 ரூபாய் கிடைக்கும்வரை இடைக்கால கொடுப்பனவாக 5 ஆயிரம் ரூபாய் வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை இ.தொ.கா தலைவர் முன்வைத்துள்ளார். இதனை வரவேற்று சுப்பையா ஆனந்தகுமார் அறிக்கையொன்றை விடுத்துள்ளார்.

“தோட்டத் தொழிலாளர்களுக்குச் சம்பள உயர்வு கிடைக்க வேண்டுமென்பதில் ஜனாதிபதியாக உறுதியாக உள்ளார். அதனால்தான் மே தினத்தன்று கொட்டகலைக்கு வந்து தொழிலாளர்களுக்கு நற்செய்தியை வெளியிட்டார்.

எனினும், பெருந்தோட்டக் கம்பனிகள் நீதிமன்றத்தை நாடியுள்ளதால் தொழிலாளர்களுக்கு இன்னும் அந்த சம்பள உயர்வு கிட்டவில்லை. இது கவலையளிக்கின்றது. இருந்தபோதிலும் நீதிமன்றம் ஊடாக நல்ல முடிவு வரும் என நம்புகின்றோம்.

9 பெருந்தோட்ட நிறுவனங்கள் சம்பள உயர்வை வழங்குவதற்கு முன்வந்துள்ளன. ஆயிரத்து 700 ரூபாவுக்கும் குறைவான சம்பளத்தை ஏற்பதற்குத் தோட்டத் தொழிலாளர்கள் தயாரில்லை. நாமும் அதற்கு உடன்படமாட்டோம். இந்நிலையில், நாள் சம்பளமாக ஆயிரத்து 700 ரூபாய் கிடைக்கும்வரை 5 ஆயிரம் ரூபாய் இடைக்கால கொடுப்பனவை வழங்குமாறு முன்வைக்கப்பட்டுள்ள கோரிக்கை நியாயமானது. அதனை வரவேற்கின்றேன் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

# காணிகள் தராமையால் வீட்டுத் திட்டத்தில் தடை

2024 ஒகஸ்ட் மாதத்தில் கட்டி முடிக்கப்படும் என்ற உறுதி மொழியுடன், சுமார் 375 மில்லியன் ரூபாய் செலவில், 1,300 வீடுகளைக் கட்டுவதற்காக, பாரத்-லங்கா மலைநாட்டுத் தோட்ட வீடமைப்பு திட்டம் என்ற பெயரில், கோலாகலமாக ஆரம்பித்து வைக்கப்பட்ட, நான்காம் கட்ட இந்திய வீடமைப்பு திட்டம் இடை நின்றுள்ளது.

இந்நிலையில், தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் எம்.பி. தலைமையில் எம்.பி.கள் வேலு குமார், உதய குமார் ஆகியோர் அடங்கிய தூதுக்குழுவுக்கும், இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜாவுக்கும் இடையில், இன்றைய அரசியல் நிலைமை, இலங்கை பொருளாதார அபிவிருத்திக்கான இந்திய உதவிகள், மலையகத்துக்கான பிரத்தியேக கல்வி, தொழில்நுட்பத் துறைகளுக்கான உதவிகள் ஆகியவை பற்றிக் கலந்துரையாடல் நிகழ்ந்து உள்ளது.

இது தொடர்பில் மனோ கணேசன் எம்.பி. கூறியுள்ளதாவது,

தமிழ் முற்போக்கு கூட்டணி பங்கு பெறுகின்ற எமது அரசாங்கம் விரைவில் உருவாகும். கடந்த 2015-2019 நல்லாட்சியில் நடை பெற்றதை போன்று, தாமதங்களைக் களைந்து ஒட்டு மொத்த 10,000 வீடமைப்பு பணிகளையும் நாம் செய்து முடிப்போம் என நாம் இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜாவிடம் உறுதி கூறினோம்.

மலையக பெருந்தோட்ட மக்களின் காணி உரிமை தொடர்பில் இன்று நிலவும் உதாசீன போக்கை நாம் முடிவுக்குக் கொண்டு வருவோம். 200 ஆண்டுகளுக்கு முன் பிரிட்டிஷ் காலணி அரசு கட்டிய லயன் காம்பறாக்களை கிராமங்கள் என்ற சொல்ல முயலும் முயற்சியை, எமது காணி உரிமையைக் குழி தோண்டி புதைக்கும் செயல்பாடாக நாம் பார்ப்பதற்குக் காணி உரிமை தொடர்பில் இன்றைய அரசின் உதாசீன போக்கே காரணம் எனவும் நாம் இந்தியத் தூதரிடம் எடுத்துக் கூறினோம். மேலும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவை சந்தித்து, லயன் காம்பறாக்களை கிராமங்கள் என்ற யோசனைக்கு, நாம் வழங்கிய ஆறு அம்ச மாற்று யோசனை ஆவணத்தையும் நாம் இந்தியத் தரப்புக்கு வழங்கினோம்.

நான்காம் கட்ட இந்திய வீடமைப்பு திட்டத்துக்கு மேலதிகமாக, இந்திய அரசு பின்வரும் உதவிகளை மலையக மக்களின் நலன் கருதி வழங்க உள்ளதாக எமக்கு இந்தியத் தூதர் சந்தோஷ் ஜா எடுத்துக் கூறினார்.

1. விஞ்ஞானம், ஆங்கிலம், தொழில் நுட்ப கல்வி, கணிதம் ஆகிய துறை சார் ஆசிரியர் பயிற்சி
2. மாணவர்களுக்கான அப்பியாச கொப்பிகள், பாடசாலை பைகள் வழங்கல்
3. தோட்டத் தொழிலாளர் வீடுகளுக்குச் சூரிய சக்தி மூலமான விளக்குகள்
4. ஸ்மார்ட் வகுப்பறைகள்
5. பாடசாலை பௌதிக கட்டுமானங்கள்
6. தொண்டமான தொழில் நுட்ப நிலையத்தைத் தரம் உயர்த்தும் உதவிகள்

இவை அனைத்தும் நமது மக்கள் நலன் கருதி இந்திய அரசால் வழங்கப்படும் உதவிகள். ஆகவே, இவற்றுக்குத் தமிழ் முற்போக்கு கூட்டணியின் நன்றிகளைத் தெரிவித்துக்கொண்டு, அதேவேளை, இவற்றை அரசியல் நோக்கங்களுக்கு அப்பால் பாரபட்சம் இன்றி அனைத்து மாவட்ட மக்களுக்கும் வழங்கப்படுவதை உறுதி செய்யும்படி இந்திய அரசை நாம் கோரினோம் என்றும் மனோ கணேசன் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது என்றார்.

# 15 அங்கத்தவர்கள் அடங்கிய அபிவிருத்தி குழு நியமனம்

அந்தவகையில், குறித்த ஒவ்வொரு குற்றச்சாட்டுத் தொடர்பாகவும் விபரமான கலந்துரையாடல் இடம்பெற்றது. அதில் உடனடியாக நிவர்த்தி செய்யப்படக்கூடிய பிரச்சினைகளை நிவர்த்தி செய்யுமாறு கூறிய அமைச்சர், தான் குறித்த துறைசார்ந்த அமைச்சர் இல்லை என்பதால் ஏனைய விடயங்கள் தொடர்பாக சுகாதாரத்துறை அமைச்சர் ரமேஷ் பத்திரன மற்றும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க ஆகியோருடன் கலந்துரையாடி தீர்க்கமான ஒரு பதிலை வழங்குவதாகக் கூறினார்.

அத்துடன் 15 அங்கத்தவர் உள்ளடங்கிய அபிவிருத்தி குழு ஒன்று தெரிவுசெய்யப்பட்டு மாதாந்தம் ஒரு கலந்துரையாடலை வைத்தியசாலை நிர்வாகத்துடன் நடாத்த வேண்டும் என கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் நடைபெற்ற



இந்த கலந்துரையாடலில் வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் பத்திரன, யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன், சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் பதில் வைத்திய அத்தியட்சகர் வைத்தியர் ரஜீவ், நோயாளர் நலன்புரி சங்கத்தினர், சமூக மட்ட பொது அமைப்பினர் மற்றும் பொதுமக்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

# மரணத்தை ஏற்படுத்தும் வீதியாக மாறிய ஏ-9 வீதி

குறித்த வீதியில் வளைவு காணப்படுவதுடன், அந்த வளைவில் ஏற்கெனவே விபத்துக்கள் இடம்பெற்றும் உள்ளன. இந்நிலையில் கொட்டப்பட்டுள்ள மண்ணினால் மேலும் விபத்துக்கள் ஏற்படுவதற்கான சந்தர்ப்பங்கள் அதிகம் உள்ளன. இதனால் மரணம் கூட சம்பவிக்கக்கூடும் என மக்கள் அச்சம் வெளியிட்டுள்ளனர்.

குறித்த மண்ணை அகற்றுவதற்கு நல்லூர் பிரதேச சபையோ அல்லது வீதி அபிவிருத்தி அதிகாரசபையோ இதுவரை எந்தவிதமான நடவடிக்கைகளும் எடுக்கவில்லை. எனவே, கொட்டிக்கிடக்கும் மண்ணை வீதியில் இருந்து அகற்றிப் பாதுகாப்பான போக்குவரத்துக்கு வழிசமைக்குமாறு மக்கள் கேட்டுக் கொள்கின்றனர்.



# தங்க நுழைவாயில்...

வி.ரி.சகாதேவராஜா

கதிர்காமத்தில் மாணிக்க கங்கைநதி தீரத்திலே நிர்மாணிக்கப்பட்ட தங்க நுழைவாயில் திறக்கப்பட்டுள்ளது.


பல இலட்சம் ரூபாய் செலவில் நிர்மாணிக்கப்பட்ட தங்க நுழைவாயில் இன்று (22) திங்கட்கிழமை காலை தீர்த்தோற்சவம் இடம்பெறவுள்ளது.

கதிர்காம தேவாலய நிலமே திஷான் குணசேகர தலைமையில் இந் நிகழ்வு நடைபெறவுள்ளது.

மிகவும் அழகாக நிர்மாணிக்கப்பட்டுள்ள இந்த நுழைவாயிலூடாக யானைகள் சகிதம் பேழை எடுத்துச் செல்லப்பட்டு நீர் வெட்டு (தீர்த்தோற்சவம்) இடம்பெறும்.










# தனிநபர் போராட்டம்

நோர்வூட் பிரதேசத்தைச் சேர்ந்த குடியிருப்பாளரான ராஜலிங்கம் அன்புராஜ் என்பவர் ஞாயிற்றுக்கிழமை (21) தனிநபர் போராட்டமொன்றை முன்னெடுத்துள்ளார்.

நோர்வூட் எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு முன்பாக முன்னெடுக்கப்பட்ட தனிநபர் போராட்டத்தில், “பொருட்களின் விலையைக் குறை”, “நாட்டின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல்” என்று எழுதப்பட்ட சுலோகத்தை ஏந்தியவாறு தனது போராட்டத்தை முன்னெடுத்துள்ளார்.



## கஞ்சிபானின் சகாக்கள் மூவர் கைது

பாதாள உலக கும்பலைச் சேர்ந்த கஞ்சிபானி இம்ரானின் சகாக்கள் மூவரை பொலிஸ் விசேட அதிரடிப்படை அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.

ராகம, வெலிசர மற்றும் வெல்லம்பிட்டிய பிரதேசங்களில் வசிக்கும் 24 மற்றும் 28 வயதுடைய பெண்ணொருவரும் இருவருமே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

வெளிநாட்டில் உள்ள ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவாளியும் போதைப்பொருள் கடத்தல்காரனுமான கஞ்சிபானி இம்ரானினால் கடத்தப்படும் போதைப்பொருள் கடத்தலை, செல்வகுமார் ரஞ்சித் என்பவர் இந்த நாட்டில் வழி நடத்தி வந்துள்ளார் என்பது தெரியவந்துள்ளது.

## சட்டவிரேத மாணிக்கக் கற்கள் அகழ்வு; 11 பேர் உபகரணங்களுடன் கைது



ரஞ்சித் ராஜபக்ஷ

பொகவந்தலாவை பகுதியில் சட்ட விரோதமாக மாணிக்கக் கற்கள் அகழ்வில் ஈடுபட்டு வந்த 11 பேரை ஞாயிற்றுக்கிழமை (21) காலை கைது செய்த பொலிஸார், அகழ்விற்கு பயன்படுத்திய உபகரணங்களையும் கைப்பற்றியுள்ளனர்.

பொகவந்தலாவை -ராணி காடு தோட்ட மற்றும் காசல்ரீ நீர் தேகத்திற்கு நீர் வழங்கும் மாஎலிய வனப் பகுதியில், பொலிஸார் மற்றும் அதிரடி படையினர் இணைந்து மேற்கொண்ட சுற்றி வளைப்பின் போதே இந்த கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்டவர்கள் ஹட்டன் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்படவுள்ளதாக பொகவந்தலாவ பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி சுகத் தெரிவித்துள்ளார்.



## விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப பல்கலைக்கழகம் திறந்து வைப்பு

எம்.எஸ்.எம்.நூர்தீன்

மட்டக்களப்பு- பூனானையில் நிர்மாணிக்கப்பட்டுள்ள சர்வதேச விஞ்ஞான மற்றும் தொழில்நுட்பப் பல்கலைக்கழகம் உத்தியோகப்பூர்வமாகத் திறந்து வைக்கும் நிகழ்வு சனிக்கிழமை(20) இடம்பெற்றது.

இந்நிகழ்வில், ஜனாதிபதி பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு பல்கலைக்கழகத்தை திறந்து வைத்தார். இதனை நினைவு கூறும் முகமாக முத்திரை ஒன்றும் வெளியிட்டு வைக்கப்பட்டது.

முன்னாள் கிழக்கு மாகாண ஆளுநரும் முன்னாள் அமைச்சருமான எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ் முயற்சியினால் மட்டக்களப்பு பல்கலைக்கழகம் என்ற பெயரில் ஆரம்பித்து வைக்கப்பட்டு, பின்னர் அது மட்டக்களப்பு- பூனானையில் நிர்மாணிக்கப்பட்டு சர்வதேச விஞ்ஞான மற்றும் தொழில்நுட்பப் பல்கலைக்கழகம் என்ற பெயரில் தற்போது இயங்கி வருகின்றது.

இந்த நிகழ்வில், கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிசாட் பதியுதீன் உட்பட பாராளுமன்ற உறுப்பினர்கள் அரசியல் பிரமுகர்கள் கல்வியாளர்கள் சிவில் சமூக பிரதிநிதிகள் என பலரும் கலந்து கொண்டனர்.

நாட்டின் பல பகுதிகளிலும் இருந்தும் ஆயிரக்கணக்கான மக்கள் இப்பல்கலைக்கழகத்தைப் பார்வையிட்டமை குறிப்பிடத்தக்கது.



## மருமகனின் தாக்குதலில் மாமனார் மரணம்

மருமகனின் தாக்குதலினால், மாமனார் உயிரிழந்த சம்பவம் அம்பாறை மாவட்டத்தில் ஞாயிற்றுக்கிழமை(21) அதிகாலை இடம்பெற்றுள்ளது.

சாய்ந்தமருது பொலிஸ் பிரிவிற்குட்பட்ட வொலிவேரியன் கிராம பிரிவு 09இல் வசித்து வந்த 62 வயதுடைய மீராசாயிப் சின்னராசா என்பவரே உயிரிழந்துள்ளார்.

திருமணமான தனது மகளை விவாகரத்து செய்யத் தயாரான மருமகனுடன் ஏற்பட்ட முரண்பாடே கொலையில் முடிவடைந்துள்ளதாக பொலிஸாரின் ஆரம்பக்கட்ட விசாரணையிலிருந்து தெரியவந்துள்ளது.

சந்தேக நபரான 32 வயதுடைய றிஸ்வி முகமட் அன்சார் தலைமறைவாகியுள்ளார்.

தனது மாமாவுடன் அடிக்கடி தகராறு செய்து வந்த குறித்த சந்தேகநபர், போதைப்பொருளுக்கு அடிமையானவர் என்பதுடன், சாய்ந்தமருது பொலிஸ் நிலையத்திலும் இரு வேறு குற்றச்சாட்டிற்கு விசாரணைக்கு அழைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

தாக்குதலுக்குள்ளாகி மரணடைந்தவரின் சடலம் கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதுடன், இது தொடர்பிலான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## கார் எரிந்து நாசம்

கொழும்பு - ஹட்டன் வீதியின் கினிகத்தேன-தியகல பகுதியில் ஞாயிற்றுக்கிழமை (20) கார் ஒன்று தீப்பிடித்து எரிந்ததால் அவ் வீதியில் இரண்டு மணித்தியாலங்களுக்கு மேல் போக்குவரத்து தடைப்பட்டுள்ளது.

பாணந்துறையிலிருந்து நுவரெலியா நோக்கி பயணித்த கார் ஒன்றே இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளது.

காரில் தீ விபத்து ஏற்பட்டபோது, காரில் பயணித்த ஐவரில் ஒருவருக்கு மட்டும் சிறு தீக்காயங்கள் ஏற்பட்டுள்ளதோடு ஏனையவர்களுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படவில்லை எனவும் கார் முற்றாக எரிந்து நாசமானதாகவும் கினிகத்தேனை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பிலான மேலதிக விசாரணைகளை கினிகத்தேனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



## எரிந்த நிலையில் சடலம் மீட்பு

ஏ.எச்.ஹஸ்பர்

திருகோணாமலை- தம்பலகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கூட்டாம்புளி வயல் நிலப் பகுதியில் எரிந்த நிலையில் சடலமொன்று சனிக்கிழமை (20) மாலை மீட்கப்பட்டுள்ளதாக தம்பலகாமம் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

திருகோணமலை-அன்பு வழிபுரத்தைச் சேர்ந்த 53 வயதுடைய சிவலிங்கம் ஜெயசீலன் என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

விவசாயி ஒருவர் தனது வயலுக்குச் சென்ற வேளையில், எரிந்த நிலையில் சடலம் ஒன்று காணப்பட்டதையடுத்து, இது தொடர்பில் தம்பலகாமம் பொலிஸாருக்கு தெரிவித்துள்ளார். அதற்கமைய சம்பவ இடத்திற்கு விரைந்த தம்பலகாம பொலிஸார், சடலத்தை மீட்டுள்ளதுடன், குறித்த சம்பவ இடத்துக்கு கந்தளாய் நீதிமன்ற பதில் நீதவான் மற்றும் சட்ட வைத்திய அதிகாரி விஜயம் செய்து சடலத்தைப் பார்வையிட்டுள்ளனர்.



# சட்டத்தின் மீதான நம்பிக்கையை மக்கள் இழந்ததால் விபரீதம்

அசம்பாவிதங்களை ஏற்படுத்தும் பொது சம்பவங்களுக்குப் பிறகு, பொதுமக்கள் கொதித்தெழுவதன் ஊடாக சேதங்கள் விளைவிக்கப்படுமாயின், பொதுச் சொத்துக்களுக்குச் சேதம் விளைவித்தனர் என்ற குற்றச்சாட்டின் பேரில், பொதுமக்கள் கைது செய்யப்பட்டு நீதியின் முன்னிறுத்தப்படுவார்கள்.

சடத்தை மக்கள் கையிலெடுக்க முடியாது என்பதில் உறுதியாக இருக்கவேண்டும். எனினும், சட்டத்தைக் காப்பாற்ற வேண்டியவர்கள் கைக்கட்டி வேடிக்கை பார்ப்பார்களாயின், மதிக்க வேண்டியவர்கள் மதிக்காவிடின், பொதுமக்களே ஆகக்கூடுதலாகப் பாதிக்கப்படுவார்கள். அதிலிருந்து தங்களைக் காப்பாற்றிக் கொள்வதற்காகத் தற்பாதுகாப்பு நடவடிக்கைகளை மக்கள் முன்னெடுப்பர்.

நமது நாட்டை பொறுத்தவரையில், இவ்வாறான பல சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. சந்தேகநபர்கள், நீதிமன்ற தீர்ப்பின் ஊடாக குற்றவாளிகளாக்கப்பட்டு சிறைவாசம் அனுபவித்து வருகின்றனர். எனினும், சிறப்புரிமைச் சட்டத்தைப் பயன்படுத்தி மக்கள் பிரதிநிதிகள் தப்பித்துக்கொள்கின்றனர். நிலைமை அந்தளவுக்குச் சென்று விட்டது.

அதனால்தான், கடந்த அரகலயவின் போது, 225 பேருக்கு எதிராகவும் விரல் நீட்டப்பட்டது. எனினும், மக்கள் பிரதிநிதிகளில் ஒருசிலரைத் தவிர ஏனையோர், “பழைய குருடி கதவை திறவடி” என்பதைப்போலவே செயற்பட்டுக் கொண்டிருக்கின்றனர்.

கற்பிட்டி சுற்றுலா நீதிமன்றத்தால் திறந்த பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்த புத்தளம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீம், கைது செய்யப்பட்டு, நீதிமன்றத்தின் ஊடாக சனிக்கிழமை (20) பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தார். திறந்த பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்த நிலையில், பொது நிகழ்வில் கலந்துகொண்டிருந்தமையை கடும் கண்டனத்துக்கு உட்படுத்தி, செய்திகள் வெளியாகியிருந்த நிலையிலேயே அவர் கைது செய்யப்பட்டார்.

மக்கள் பிரதிநிதிகளே, சட்டங்களை முறையாகக் கடைப்பிடிக்காமல், அப்பட்டமாக மீறுவார்களாயின், சட்டங்களை அச்சொட்டாகக் கடைப்பிடிக்க வேண்டுமெனப் பொதுமக்களிடம் எதிர்பார்ப்பது கோழைத்தனம். எனினும், பாராளுமன்ற சிறப்புரிமையைப் பயன்படுத்தி, மக்கள் பிரதிநிதிகள் தப்பித்துக் கொள்கின்றனர்.

பாராளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீம், பெருந்தொகையான தங்கத்தைக் கடத்திவந்த நிலையில் கைதுசெய்யப்பட்ட ஒரு நபர், அத்துடன், கல்பிட்டி சுற்றுலா நீதவான் நீதிமன்றில் நடைபெற்ற வழக்கில், மூன்று தடவைகள் ஆஜராகாத நிலையில், திறந்த பிடியாணை பிறப்பிக்கப்பட்டு, கைது செய்யப்பட்டு, பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

சபைக்குள் அவ்வப்போது இடம்பெற்ற சம்பவங்களில் மக்கள் பிரதிநிதிகள் நடந்துகொண்ட விதங்களை அடுத்து, அவர்கள் மீதான செல்வாக்கு வெகுவாக குறைந்துவிட்டது. அதிலிருந்து மீண்டெழுவது இலகுவான காரியமல்ல. ஏனெனில், தற்போது ஆங்காங்கே நடத்தப்படும் அரசியல் கூட்டங்கள் உள்ளிட்ட வேறு அரசியல் நிகழ்வுகளில், பங்கேற்கும் மக்களின் எண்ணிக்கையை பார்க்குமிடத்து அது புலனாகிறது.

ஒரு நிறுவன அமைப்புமுறையால் அந்நிறுவன ஆளுகை எல்லைக்குள் வாழும் அனைவரையும் ஒழுங்குபடுத்தும் விதிகள், நெறிமுறைகள் போன்றவற்றைச் சட்டம் குறிக்கும். அந்த சட்டத்தின் மீது மக்கள் நம்பிக்கை இழந்ததால் சட்டத்தைக் கையில் எடுக்கின்றனர். அவர்கள் சிக்கிக்கொள்கின்றனர். சட்டத்தை மதிக்காதவர்கள், சிறப்புரிமைகளுக்குள் புகுந்து விளையாடுகின்றனர். இது அவ்வளவுக்கு நல்லதல்ல.




தமிழ் Mirror www.tamilmirror.lk க்கு எழுதுங்கள்


தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துக்களையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk




## வாழ்வியல் தரிசனம்

இருவர் தங்களுக்குள் பேசியபடி சென்றார்கள். அவர்களில் ஒருவர், ஊரில் யாரோ இளைஞர்கள் சண்டை செய்ததாகச் சொன்னார். எங்கு நடந்தது என்பது பற்றிப் பேசாமல் சென்று கொண்டிருந்தனர்.

இதைக் கேட்ட வீதியின் அருகே நின்றிருந்தவர், “என்ன எங்கள் ஊரில் சண்டையா” என்று கேட்டு விட்டு, உடனே ஊருக்குள் சென்று, தனது கற்பனைகளையும் சேர்த்து, வாய், மூக்கு, வால் என்பவற்றைச் சேர்த்து, அங்குள்ள ஒருவருக்குச் சொல்ல, அவரும் அதற்கு மேலும் பல கதைகளைச் சோடித்துச் சொல்ல, ஊர்ச் சனங்களும் ஆவேசத்துடன் ஆயுதங்களை எடுத்துக்கொண்டு, அவர்களைத் தேடிச் சென்றார்கள்.

ஊரே பரபரப்படைந்தது. முடிவில் அங்கு ஒன்றுமே நடக்கவில்லை என்பதை அறிந்து, “யாரடா இதைச் சொன்னது” என கேட்க, கதையைக் கட்டியவர்கள் ஒளித்துத் தப்பித்து விட்டார்கள். முடிவில் அங்கு ஒன்றுமே நடக்கவில்லை என்பதை அறிந்து,

தத்தமது காரியங்களைச் செய்தால், வீணான சிந்தனைகள் புறப்படாது. கலவரங்கள் எல்லாமே வதந்திகளால் தான் உருவாகின்றன. யுத்தங்கள் கூட!

–பருத்தியூர் பால. வயிரவநாதன்

# நெருக்கடிக்குள் ஜனாதிபதித் தேர்தல்

– லக்ஸ்மன்

**ஜனாதிபதித் தேர்தலைப் பொறுத்தமட்டில், ஏந்தவொரு பிரதான வேட்பாளரும் 50 சதவீதத்திற்கும் அதிகமான வாக்குகளைப் பெறப்போவதில்லை என்ற எதிர்வு கூரல்கள் வந்தவண்ணமிருக்கின்றன**

அரசியலமைப்பின் 22ஆவது திருத்தத்துக்கான வர்த்தமானி அறிவித்தலை ஜனாதிபதி தன்னுடைய அதிகாரத்தைப் பயன்படுத்தி வெளியிட்டிருக்கின்ற நிலையில், ஜனாதிபதி தேர்தலை பிற்போடுவது முழு நாட்டிற்கும் நன்மை பயக்கும். அதிலும் குறிப்பாகத் தமிழர்களுக்கு நன்மையே என்ற ஒரு கதையை ஓய்வு பெற்ற நீதியரசரும், முன்னாள் வடக்கு மாகாண முதலமைச்சரும் தற்போதைய பாராளுமன்ற உறுப்பினரும் தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவருமான சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்திருக்கிறார்.

அதற்காக அவர் சொல்லும், ஜனாதிபதி தேர்தலைப் பொறுத்தவரைக்கும் வேட்பாளர் எவரும் 50 சதவீதத்திற்கும் அதிகமான வாக்குகளைப் பெறமுடியாத நிலைமை காணப்படுகிறது. அதனால் அவர்கள் சிறுபான்மையின மக்களின் வாக்குகளைப் பெற வேட்பாளர்கள் முனைப்புக் காட்டுவார்கள். அதேநேரம், ஜனாதிபதி தேர்தலில் எவரும் 50 சதவீதத்திற்கும் அதிகமான வாக்குகளைப் பெறாத நிலைமை ஏற்படும் போது நாட்டில் அரசியல் ஸ்திரத்தன்மை இல்லாமல் போகும். ஏற்கெனவே நாட்டில் பொருளாதார நெருக்கடிகள் காணப்படுகிறது. இந்நிலையில், அரசியல் ஸ்திரத்தன்மை இல்லாது போனால் நாடு மிக மோசமான பொருளாதார பின்னடைவுகளைச் சந்திக்க நேரிடும். அத்துடன், தேர்தலுக்காகப் பெருமளவான நிதிகள் செலவழிக்கப்பட வேண்டிய நிலைமையும் ஏற்படும். அதுவும் நாட்டின் பொருளாதாரத்தைப் பாதிக்கும் போன்ற காரணங்கள் பெரும் பொருத்தப்பாடானதாக இல்லை.

இந்த அளவில்தான் நாம் நாட்டில் அறிவிக்கப்படும் என்று எதிர்பார்த்திருக்கும் ஜனாதிபதித் தேர்தல் பற்றியும் அது தொடர்பில் நடைபெற்று வருகின்ற வாதப் பிரதிவாதங்களும் வேட்பாளர் தெரிவு தொடர்பான முயற்சிகளும் பற்றியும் சிந்திக்க வேண்டியவர்களாக மாறுகின்றோம்.

ஏதோ ஒருவகையில், பெரும்பான்மைக் கட்சிகளுக்கான நெருக்கடியாக அறிவிக்கப்படவிருக்கும் ஜனாதிபதித் தேர்தல் இருக்கிறது என்பதே உண்மை. ஐக்கிய தேசியக் கட்சி, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன, தேசிய மக்கள் சக்தி, ஐக்கிய மக்கள் சக்தி போன்ற கட்சிகளுக்கே இந்த நெருக்கடி இருக்கிறது, பொது வேட்பாளர் என்பவர் எந்த எந்தக் கட்சிகளின் இணக்கத்துடன் நிறுத்தப்படுவார் என்பது இதுவரை தெரியவில்லை.

இவ்வாறானால் தற்போதைய ஜனாதிபதிதான் அந்தப் பொது வேட்பாளரா? என்பது இதுவரை கேள்வியாக இருக்கிறது. தமிழ் ஜனாதிபதி வேட்பாளர் என்பவர் எவ்வாறு தீர்மானிக்கப்படுவார். அவர்களுடைய முதல் நிலைப்பாடு, இரண்டாவது நிலைப்பாடு என்ன என்பது தெரியாமலேயே இருக்கின்ற நிலையில், தமிழ்த் தேசியப் பேரவையின் புரிந்துணர்வு உடன்பாடு யாழ்ப்பாணத்தில் இன்றைய தினம் திங்கட்கிழமை (22) கைச்சாத்திடப்படுகிறது.

தமிழ் மக்கள் ஆண்டாண்டு காலமாக எதிர்பார்க்கின்ற தமிழர்களுக்கான சுயநிர்ணய உரிமையை அடைந்து கொள்வதற்குத் தமிழ் ஜனாதிபதி பொது வேட்பாளர் களமிறக்கல் எவ்வாறு சாதகமானதாக இருக்கும் என்பது வெளிப்படையாகத் தெரியவில்லை. அனைத்து தரப்பினரும் ஒன்றிணைந்து செயற்படவேண்டிய கட்டாயத்திலிருக்கும் நிலையில் தமிழர்களின் அரசியல் தலைமைகள் இதில் இன்னமும் ஒற்றுமைப்படவில்லை. தமிழ் மக்களுக்கான அரசியலைச் செய்யும் பிரதான அரசியல் கட்சியாகப் பார்க்கப்படுகின்ற இலங்கை தமிழரசுக்கட்சி இன்னமும் இந்த விடயத்தில் ஒத்துவரைவில்லை. அதேநேரத்தில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியாக இருக்கின்ற அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் இதற்கு முழுமையான எதிர்ப்பினையே தெரிவித்துவருகிறது.

நடைபெறப்போகும் ஜனாதிபதித் தேர்தலைப் பொறுத்தமட்டில், எந்தவொரு பிரதான வேட்பாளரும் 50 சதவீதத்திற்கும் அதிகமான வாக்குகளைப் பெறப்போவதில்லை என்ற எதிர்வு கூரல்கள் வந்தவண்ணமிருக்கின்றன. இது போலவே கடந்த 2020இல் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலிலும் எதிர்வு கூரல்கள் காணப்பட்டன. இருந்தாலும் கோட்டாபய ராஜபக்ஷ 69 இலட்சம் வாக்குகளைப் பெற்று பெரும்பான்மை ஜனாதிபதியாகியிருந்தார். இருந்தாலும் தற்போதைய நிலையில், வெளிவருகின்ற எதிர்வு கூரல்கள் பலிப்பதற்கு வாய்ப்பிருக்கிறது என்றே கொள்ளமுடிகிறது. கடந்த ஜனாதிபதித் தேர்தலில் தனக்குக் கிடைத்த வாக்குகளை வைத்துக்கொண்டு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச இந்தத் தேர்தலைக் கணிப்பிடுகின்றார். அப்போதைய அரசியல் கள நிலைமை வேறு என்பதனை இதில் அவர் மறந்துவிடுகிறார். அதே நேரத்தில், மக்கள் விடுதலை முன்னணி- தேசிய மக்கள் சக்தியின் வேட்பாளராகக் களமிறங்கும் பாராளுமன்ற உறுப்பினர் அனுரகுமார திசாநாயக்க அரகலயவின் அதிர்வுகளில் நம்பிக்கை கொண்டிருப்பதாகவே தோன்றுகிறது.

ஜனாதிபதித் தேர்தலுக்கான உத்தியோகப்பூர்வமான அறிவிப்பை வெளியிடும் அதிகாரம் கடந்த 16ஆம் திகதி முதல் தேசிய தேர்தல் ஆணைக்குழுவின் கைகளுக்குச் சென்றிருந்தாலும் தேர்தல் ஆணைக்குழு இதுவரையில் அதற்கான அறிவிப்பினை வெளியிடவில்லை. இடையில், ஜனாதிபதியின் பதவிக்காலத்தினை நீடிப்பது, ஜனாதிபதித் தேர்தலை ஒத்திவைப்பது என பலவாறாக முயற்சிகள் மேற்கொள்ளப்படுகிறன.

ஜனாதிபதியின் பதவிக்காலம் குறித்துத் தாக்கல் செய்யப்பட்ட மனு மற்றும் தேர்தலைப் பிற்போடக்கோரி தாக்கல் செய்யப்பட்ட மனு போன்றன தோல்வியடைந்த யுக்திகளாகப் போயிருக்கின்றன. இருந்தாலும், இவற்றுக்குப் பின்னால் தற்போதைய ஜனாதிபதி இருப்பதாகக் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டாலும் அவர் பொது வெளியில் ஜனாதிபதித் தேர்தல் நடக்கும் என்றே அறிவித்துவருகிறார்.

ஆனால், அவருடைய உத்தரவின் பேரில் வெளியிடப்பட்ட 22ஆவது திருத்தம் தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் இந்தப் பின்புலத்தினை வெளிக்காட்டுவதாகவே அவதானங்கள் வெளிவருகின்றன. இருந்தாலும் அடுத்த வாரத்தில் ஜனாதிபதித் தேர்தலுக்கான திகதி அறிவிக்கப்படலாம் என்று நம்பப்படுகிறது. அது நடைபெற்றாலே உண்மையாகும். 22ஆவது திருத்தச் சட்டத்துக்கான அங்கீகாரம் அமைச்சரவையில் பெற்றபட்டிருந்தாலும் தற்போதைக்கு அதனை வர்த்தமானியில் வெளியிடப்போவதில்லை என்று நீதியமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ கூறியிருந்த போதிலும், ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தனது நிறைவேற்று அதிகாரத்தைப் பயன்படுத்தி வர்த்தமானி அறிவித்தலை வெளியிட்டுள்ளார். 22ஆம் திருத்தச் சட்டத்தை நிறைவேற்றப் பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை தேவை அத்துடன், சர்வஜன வாக்கெடுப்புக்குச் செல்ல வேண்டும். இவ்வாறிருக்க ஏன்? ரணில் இந்த விசப் பரீட்சையில் இறங்கினார் என்பது புரியாத புதிராக இருந்தாலும் அவருக்கு ஏதோ பலமான நம்பிக்கை இருக்கிறது என்பது ஒன்று மாத்திரம் நிச்சயம். அந்தவகையில்தான், 22ஆவது திருத்தம் ஜனாதிபதித் தேர்தலைப் பிற்போடுவதற்கான கடைசி முயற்சியாகப் பார்க்கப்படுகிறது.

இருந்தாலும், 19ஆம் திருத்தத்தின் போது, அரசியலமைப்பானது சரியாகத் திருத்தப்படாவிடினும் ஜனாதிபதியின் பதவிக்காலம் 5 வருடங்கள் என்று உயர்நீதிமன்றம் ஏற்கெனவே பல இடங்களில் தனது தெளிவான அபிப்பிராயத்தைத் தெரிவித்து விட்டது. ஆகவே, 22ஆம் திருத்தச் சட்டம் தேவையற்றதொன்று. இதனை வைத்துத் தேர்தலைப் பிற்போட முயற்சிப்பதையோ மக்களின் வரிப்பணத்தை வீணடிப்பதையோ விட்டுவிட்டு, ரணில் முறையாகத் தேர்தலை எதிர்கொள்ள முயற்சிக்க வேண்டும் என்ற வலியுறுத்தப்படுகின்றது. இதற்குள் இருக்கும் சுருக்குகள் அவிழ்க்கப்படுவதே முக்கியமாகும்.

ரணில் விக்ரமசிங்க, பாராளுமன்றத்தின் மூலமாக ஜனாதிபதியாகப் பதவியேற்று இரண்டு வருடங்கள் நிறைவடைந்திருக்கின்றன. இந்த இரண்டு வருடங்களில் எதனைச் சாதித்தார் என்று கேள்வி கேட்கப்பட்டால் அதற்கு ஒரேயொரு பதில் பொருளாதாரத்தினைத் தூக்கி நிமிர்த்தினார் என்று அவருக்கு ஆதரவானவர்கள் பதில் சொல்வார்கள். ஐக்கிய தேசியக் கட்சியின் மூலமாகப் பாராளுமன்றத்திற்குள் நுழைந்து உறுப்பினர், எதிர்க்கட்சித் தலைவர், அமைச்சர், பிரதியமைச்சர், பிரதமர் என பல பதவிகளிலும் அமர்ந்திருந்தாலும் நாட்டில் நிறைவேற்று அதிகாரம் அவருக்குக் கைகூடவில்லை. அந்த நிலையில் அவருக்கு அடித்த அதிர்ஷ்டமாக தான் இந்த ஜனாதிபதி பதவியை அவர் கொள்ளவேண்டும்.

அந்த அதிர்ஷ்டத்தினை அவர் முழுமையாக அனுபவிக்கிறார் என்றுதான் சொல்லவேண்டும். அதற்கு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன முழுமையாக ஒத்துழைத்து வருகின்றது. இந்த ஒத்துழைப்பினை அவர் தனக்குச் சாதகமாகப்பயன்படுத்துகிறார் என்ற குற்றச்சாட்டுகள் இருந்தாலும் நாட்டின் எதிர்காலத்துக்காகவே இதனைச் செய்து வருகிறேன் என்று ஒரே எடுப்பில் சொல்லித் தப்பித்துக் கொள்பவராகவே அவர் இருந்துவருகிறார். நடைபெறும் அல்லது அறிவிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்ற ஜனாதிபதித் தேர்தலில் அவர் வெற்றிபெறுவாரா என்பதே தெரியாவிட்டாலும் அதற்கு நாட்டிற்காகச் சிலவற்றைச் செய்துவிட்டுச் செல்வோம் என்ற சிந்தனையில் கூட இந்த 22ஆவது திருத்தத்தை அவர் சிந்தித்திருக்கலாம்.

எது எவ்வாறானாலும், இலங்கையின் அரசியல் வரலாற்றில் மிகவும் நீண்ட காலம் எதிர்க்கட்சி தலைவராகப் பதவி வகித்த ரணில் விக்ரமசிங்க அமைச்சராக, பிரதமராக இருந்த காலங்களில் செய்யமுடியாதவற்றை, ஜனாதிபதி பதவிக் காலத்தில் நாட்டுக்காக செய்ய முனைவது நல்லதே. அதிலொன்றாக 22உம் இருப்பதாக் கொள்வோம். அதே நேரத்தில் இவ்வருடத்தில் ஜனாதிபதித் தேர்தலுக்காகவும் காத்திருப்போம்.

## கடிதங்கள்

### பழுதடைந்த இயந்திரத்தை யாரும் பார்க்கவில்லை

கிளிநொச்சி-வன்னேரிக்குளம் மகா வித்தியாலயத்தில் குடிநீர் சுத்திகரிப்பு இயந்திரம் பழுதடைந்துள்ளதன் காரணமாக மாணவர்கள் குடிநீர் நெருக்கடியினை எதிர்கொண்டுள்ளனர்.

கொழும்பில் இருந்து உதவி அமைப்பின் ஒன்றின் மூலம் நான்கு மாதங்களுக்கு முன்னர் இச்சுத்திகரிப்பு இயந்திரம் பொருத்தப்பட்டது.

ரூ.7 இலட்சம் வரையான பெறுமதியுடைய இயந்திரம் பழுதடைந்து இருப்பதன் காரணமாகப் பாடசாலையின் அதிபரினால் சுத்திகரிப்பு இயந்திரத்தினை பொருத்திய நிறுவனத்திற்குப் பல தடவைகள் தகவல்கள் வழங்கியும் இதுவரை சுத்திகரிப்பு இயந்திரம் திருத்தப்படாததன் காரணமாக மாணவர்கள் குடிநீர் நெருக்கடியினை எதிர்கொண்டுள்ளனர்.

வன்னேரிக்குளம் கிராமத்தின் குடிநீர் உவர் நீராக மாறி வருவதன் காரணமாக மாணவர்களுக்கு சுத்திகரிப்பு இயந்திரம் மூலம் குடிநீர் வழங்க வேண்டிய கட்டாயத்தில் பாடசாலை நிர்வாகம் உள்ள நிலையில் சுத்திகரிப்பு இயந்திரத்தினை சீர் செய்வதற்குப் பொருத்திய நிறுவனம் தொடர்ச்சியான இழுத்தடிப்புகளை மேற்கொண்டு வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

– நடராசா கிருஸ்ணகுமார்

BNI மாநாடு 2024இல் வியாபாரங்களுக்கு

# SLT-MOBITEL வலுவூட்டியது




SLT-MOBITEL, தொழில்முயற்சியாண்மை, கைகோர்ப்பு மற்றும் வியாபார வளர்ச்சியை ஊக்குவிக்கும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த BNI இலங்கை தேசிய மாநாடு 2024க்கு அனுசரணை வழங்கியிருந்தது. இந்நிகழ்வு 2024 ஜுன் 06ஆம் திகதி நடைபெற்றது. பத்தரமுல்ல, வோட்டர்ஸ் எட்ஜ்ஜில் பிரதம நிறைவேற்று அதிகாரிகளுக்கான அமர்வுடன் ஆரம்பமாகிய இந்நிகழ்வில், SLT-MOBITEL இன் முகாமைத்துவ அணி தனது ஈடுபாட்டை கொண்டிருந்தது. பின்னர் மாலையில், இந்நிகழ்வு ஷங்கிரி-லா ஹோட்டலில் தொடர்ந்திருந்ததுடன், வியாபார கட்டமைப்பினுள் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்வதற்கான வாய்ப்பை ஏற்படுத்தியிருந்தது.

டிஜிட்டல் மாற்றியமைப்பை எதிர்பார்க்கும் சகல அளவுகளிலுமான வியாபாரங்களுக்கு SLT-MOBITEL அனுசரணை வழங்கியிருந்தது. SLT-MOBITEL இன் நவீன தொழில்நுட்ப சேவை வழங்கல்களுடன், நிபுணத்துவ ஆலோசனை மற்றும் ஆதரவுடன், தொழில்முயற்சியாளர்கள் மற்றும் நிறுவனங்களுக்கு செயற்பாடுகளை ஒழுங்குபடுத்திக் கொள்வதற்கும், உற்பத்தித் திறனை மேம்படுத்திக் கொள்ளவும், போட்டிகரமாக திகழ்வதற்கும் வசதியளிக்கின்றது. நிகழ்வில் தனது ஈடுபாட்டை வெளிப்படுத்திய SLT-MOBITEL, உள்நாட்டு வியாபார சமூகத்தின் வளர்ச்சி மற்றும் விருத்திக்கு தனது அதிவேக இணைய இணைப்புகள், cloud சேவைகள் மற்றும் சைபர்பாதுகாப்பு தீர்வுகள் போன்றவற்றினூடாக ஒன்றிணைக்கப்பட்ட தொடர்பாடல்கள், டேட்டா நிலைய சேவைகள் மற்றும் நிறுவனசார் நடமாடல் தீர்வுகள் போன்றவற்றுக்கு பங்களிப்பு வழங்கியிருந்தது.

மேலும், வருடாந்த BNI இலங்கை மாநாடு, வெள்ளி அனுசரணையாளராக இணைந்திருந்த SLT-MOBITELஇன் பங்கேற்புடன் பெருமளவு வலிமையைப் பெற்றுக் கொண்டது. வியாபாரங்களின் வெற்றிகரமான செயற்பாடுகளுக்கு தொழில்நுட்பத்தின் முக்கியத்துவத்தை நிறுவனத்தின் பிரசன்னம் வெளிப்படுத்தியிருந்தது. நிகழ்வின் வெற்றிகரமான செயற்பாடுகளுக்கு இந்த அனுசரணை பங்களிப்பு வழங்கியிருந்தமை மட்டுமன்றி, தொழில்முயற்சியாண்மை மற்றும் நிலைபேறான வியாபார செயற்பாடுகள் போன்றவற்றுக்கு உகந்த சூழலை ஏற்படுத்துவதற்கான அர்ப்பணிப்பையும் வெளிப்படுத்தியிருந்தது.

BNI தேசிய மாநாட்டினூடாக, SLT-MOBITELக்கு பரந்தளவு தொழில்முயற்சியாளர்கள் மற்றும் வியாபார நிபுணர்களுடன் தொடர்பாடல்களை பேணுவதற்கு வாய்ப்பை வழங்கியிருந்தது. ஒரே சிந்தனைகளைக் கொண்ட நிறுவனங்களுடன் இணைந்து கொண்டதனூடாக SLT-MOBITEL க்கு நேர்த்தியான மாற்றத்தை முன்னெடுக்கவும், தேசத்தின் நிலைபேறான எதிர்காலத்துக்கு அதிகளவு பங்களிப்பு வழங்கவும் உதவியாக அமைந்திருந்தது.

ஆக்கபூர்வமான கலந்துரையாடல்கள், மூலோபாயங்களை கட்டியெழுப்பல் மற்றும் காணப்படும் வாய்ப்புகள் மத்தியில் சிறப்பாக செயலாற்றல் போன்றவற்றுக்கு திரண்ட வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்கும் வகையில் வருடாந்த BNI இலங்கை மாநாடு அமைந்துள்ளது. நிலைபேறாண்மையை நோக்கிய நகர்வில், இந்த ஆண்டுக்கான மாநாடு என்பது, முதன் முதலில் ஏற்பாடு செய்யப்பட்ட காபன் நடுநிலை BNIமாநாடாக அமைந்திருந்தது. சூழல் பொறுப்புக்கான BNI இன் அர்ப்பணிப்பை இந்த நடவடிக்கை உறுதி செய்திருந்ததுடன், உலகளாவிய ரீதியில் எதிர்காலத்தில் முன்னெடுக்கப்படவுள்ள நிகழ்வுகளுக்கு முன்மாதிரியானதாகவும் அமைந்திருந்தது.

சர்வதேச வியாபார வலையமைப்பு (BNI) என்பது, 'உலகின் மாபெரும் பரிந்துரைக்கும் நிறுவனம்' என்பதாக அமைந்திருப்பதுடன், உலகளாவிய ரீதியில் 77 நாடுகளில் 325,000 அங்கத்தவர்களை கொண்டுள்ளது. பரஸ்பர ஆதரவு மற்றும் கைகோர்ப்பு ஆகியவற்றினூடாக வியாபாரங்களுக்கு வளர்ச்சியை பதிவு செய்வதற்கு அர்ப்பணித்த முன்னணி வியாபார வலையமைப்பு நிறுவனத்தின் அங்கமாக BNI இலங்கை அமைந்துள்ளது. தொடர்பாடல்களை கட்டியெழுப்பல் மற்றும் வியாபார வளர்ச்சியை ஊக்குவித்தல் போன்றவற்றை ஊக்குவிப்பதற்கு வழமையான நிகழ்வுகள் மற்றும் மாநாடுகளை இந்நிறுவனம் முன்னெடுத்திருந்தது.

# Sunshineக்கு சிறந்த முதலீட்டு உறவுகளுக்கான தங்க விருது



Sunshine Holdings, அண்மையில் கொழும்பில் நடைபெற்ற CFA Society Sri Lanka Capital Market Awards நிகழ்வில் 'சிறந்த முதலீட்டு உறவுக்கான' (Mid to Large Market Capitalization Companies) தங்க விருதை வென்றது. இந்த மதிப்புமிக்க விருது Sunshine Holdingsஇன் எதையும் சமாளிக்கக்கூடிய தன்மை, வாய்ப்புகளை அடையாளம் கண்டு அவற்றைப் பயன்படுத்துவதற்கான அர்ப்பணிப்பு மற்றும் விதிவிலக்கான முதலீட்டு உறவுகளைப் பேணுதல் ஆகியவற்றை அங்கீகரிக்கும் வகையில் வழங்கப்பட்டுள்ளது. குறிப்பாக 12 வருட Capital Market Awards நிகழ்வு வரலாற்றில் Sunshine Holdings நான்காவது தடவையாக இந்த விருதை வென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இலங்கை பட்டய நிதி ஆய்வாளர்கள் சங்கம் (CFA Society Sri Lanka) ஏற்பாடு செய்த CFA Capital Market விருது வழங்கும் நிகழ்வானது அந்த சங்கத்தின் முக்கிய அங்கமாகும். 'அரச-தனியார் உறவின் பலம்' என்ற தொனிப்பொருளில், இந்த ஆண்டுக்கான விருது வழங்கும் நிகழ்வு இலங்கையின் தற்போதைய அரச-தனியார் கூட்டுறவின் நிலை மற்றும் அவற்றின் எதிர்காலம் குறித்து கவனம் செலுத்தியது. சிறந்த சமபங்கு ஆராய்ச்சி குழு, சிறந்த சமபங்கு ஆராய்ச்சி அறிக்கை, சிறந்த கள ஆய்வு அறிக்கை, சிறந்த முதலீட்டு உறவுகள், சிறந்த அலகு நம்பிக்கை நிதி மற்றும் சிறந்த சுற்றுச்சூழல், சமூகம் மற்றும் ஆளுகை (ESG) அறிக்கையிடல் ஆகிய பிரிவுகளில் தங்கம், வெள்ளி மற்றும் வெண்கல விருதுகள் வழங்கப்பட்டன.

சிறந்த முதலீட்டாளர் உறவுகளுக்கான CFA Capital Market விருதுகள் முதலீட்டாளர்களுடன் தீவிரமாக ஈடுபடும் நிறுவனங்களை அங்கீகரிக்கின்றன, முதலீட்டாளர்களுடன் திறந்த மற்றும் செயல்திறன் தொடர்புகளை ஊக்குவிக்கின்றன, மேலும் நிறுவனங்கள் தங்கள் முதலீட்டாளர்களுடன் எவ்வாறு தொடர்பு கொள்கின்றன மற்றும் நிர்வகிக்கின்றன என்பதில் உயர் தரம் மற்றும் பயனுள்ள நடைமுறைகளை ஊக்குவிக்கின்றன. நிறுவனங்கள் இரண்டு வகைகளாக வகைப்படுத்தப்படுகின்றன, பெருநிறுவனம் முதல் நடுத்தர சந்தை மூலதன நிறுவனங்கள் மற்றும் சிறிய சந்தை மூலதன நிறுவனங்கள், அவற்றின் முதலீட்டு உறவு முறைகள் மற்றும் அவை எவ்வாறு பதிலளிக்கின்றன. பங்குத் தரகு நிறுவனங்கள், நிதி நிர்வாகிகள் மற்றும் நிறுவன முதலீட்டாளர்களைக் கொண்ட ஆய்வாளர்கள் குழு நடத்திய விரிவான கணக்கெடுப்பின் மூலம் இந்த நிறுவனங்கள் வகைப்படுத்தப்பட்டுள்ளன. மேலும், நிறுவனங்கள் தங்கள் நிர்வகிப்பு எவ்வளவு அணுகக்கூடியது மற்றும் பதிலளிக்கக்கூடியது, அவர்களின் தகவல் வெளிப்படுத்தல்களின் தரம், வெளிப்படைத்தன்மை மற்றும் நேர்மை மற்றும் வெவ்வேறு பொருளாதார நிலைமைகளில் முதலீட்டு உறவுகளை எவ்வளவு சீராக நிர்வகித்தது ஆகியவற்றின் அடிப்படையில் மதிப்பீடு செய்யப்பட்டது.

இந்த தங்க விருதை வென்றது, தொழில் தரத்தை உயர்த்துவதற்கும், இலங்கையின் மூலதனச் சந்தைகளில் சிறந்து விளங்குவதற்கும் Sunshine Holdingsஇன் வலுவான அர்ப்பணிப்புக்கு சிறந்த சான்றாகும். நான்கு தடவை தங்க விருதை வென்றது தவிர, நிறுவனம் இதற்கு முன்பு 2019 மற்றும் 2023இல் வெள்ளி விருதுகளையும் 2015இல் வெண்கல விருதுகளையும் வென்றுள்ளது.

இந்தச் சாதனை குறித்து கருத்து தெரிவித்த Sunshine Holdingsஇன் தலைமை வளர்ச்சி அதிகாரி (Chief Growth Officer) ஹிரான் சமரசிங்க, "CFA Capital Market விருது வழங்கும் நிகழ்வில் இந்த மதிப்புமிக்க தங்க விருதை வெல்ல முடிந்தமை பெரும் கௌரவமாகும். இந்த மதிப்பீடு, எங்கள் முதலீட்டாளர்களுடன் வெளிப்படையான, பதிலளிக்கக்கூடிய மற்றும் செயலில்/செயல்திறன் வாய்ந்த தகவல் தொடர்புக்கான எங்கள் வலுவான அர்ப்பணிப்பை நிரூபிக்கிறது.

Sunshineஇல் வலுவான முதலீட்டாளர் உறவுகள் எங்கள் வெற்றிக்கு முக்கிய காரணியாக இருக்கும் என்று நாங்கள் நம்புகிறோம், மேலும் இந்த விருது எங்கள் முழு குழுவின் அர்ப்பணிப்பையும் கடின உழைப்பையும் பிரதிபலிக்கிறது. முன்னோக்கிச் செல்லும்போது, எங்கள் நடவடிக்கைகள் மற்றும் தகவல்தொடர்புகளில் வெளிப்படைத்தன்மையைப் பேணவும், முதலீட்டு நிறுவனங்களிடையே நம்பிக்கையை வளர்ப்பதன் மூலம் உயர்ந்த தரத்தை தொடர்ந்து பராமரிக்கவும் நாங்கள் பணியாற்றுவோம்" என தெரிவித்தார்.

# ஸ்ரீ கதிர்வேலாயுத கந்தனின் வெள்ளி இரத பவனி





செட்டியார் தெரு ஸ்ரீ கதிர்வேலாயுத கந்தனின் வெள்ளி இரத பவனி, சனிக்கிழமை (20) நடைபெற்றது.
கந்தனின் வெள்ளித் தேர் ஜனாதிபதி மாளிகை ஊடாக கொண்டுவரப்பட்டு, ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏகநாயக்க தலைமையில் பூஜை செய்யப்பட்டு, கந்தனின் அருள் கடாட்சம் பெற்றுக் கொள்ளப்பட்டதோடு, இந்நிகழ்வில், இந்து கலாசார திணைக்கள பணிப்பாளர் மற்றும் அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

























பங்களாதேஷ்

கடுமையான ஊரடங்கில்

# கலவர பூமியான பங்களாதேஷ்

பங்களாதேசில் கடந்த சில நாட்களாக மாணவர்கள் போராட்டம் நடத்தி வரும் நிலையில், இந்தப் போராட்டம் வன்முறையாக மாறி பெரும் பதட்ட நிலையை ஏற்படுத்தியுள்ளது.

பாகிஸ்தானுக்கு எதிரான போரில் உயிர் தியாகம் செய்த வீரர்களின் வாரிசுகளுக்கு 30 சதவீதம் இட ஒதுக்கீடு அளிக்கப்படும் என்று பங்களாதேஷ் அரசு அறிவித்ததையடுத்து, இந்த அறிவிப்புக்கு எதிர்ப்பு தெரிவித்து மாணவர்கள் போராட்டத்தில் குதித்துள்ளனர்.

இந்தப் போராட்டம் தற்போது பெரும் கலவரமாக வெடித்துள்ளதுடன், போராட்டக்காரர்கள் பல இடங்களில் தீ வைத்து எரித்து கொண்டே இருப்பதாக கூறப்படுகிறது. குறிப்பாக டாக்காவில் உள்ள சிறைச்சாலைக்கு தீ வைத்ததில், சுமார் 800 கைதிகள் தப்பி ஓடி விட்டதாக கூறப்படுகிறது.

இந்த நிலையில், கலவரக்காரர்களை கண்டதும் சுட்டுக்கொல்ல பங்களாதேஷ் அரசு உத்தரவு பிறப்பித்துள்ளதாகவும் கடுமையான ஊரடங்கு



உத்தரவு அமுல்படுத்தப்பட்டுள்ளதாகவும் செய்திகள் வெளியாகி உள்ளன.

இந்த கலவரத்தில் இதுவரை 133 பேர் பலியானதாகவும் ஆயிரக்கணக்கானோர் படுகாயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருவதாகவும் கூறப்படுகின்றது.

மேலும் கலவரத்தை கட்டுப்படுத்த அந்நாட்டு இராணுவம் களமிறங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இண்டியானா

மனைவி கண் முன்னே

## கணவர் சுட்டுக் கொலை



அமெரிக்காவில் வசித்து வந்த இந்தியர் ஒருவர் துப்பாக்கிச்சூட்டில் உயிரிழந்துள்ளார்.

அமெரிக்காவின் இண்டியானா மாகாணத்தில் வசித்து வந்தவர் கவின் தசார். உத்தரப்பிரதேசத்தைச் சேர்ந்த இவர், சிந்தியா என்பவரைக் காதலித்து திருமணம் செய்துள்ளார்.

சில தினங்களுக்கு முன்னர் கவின், தனது மனைவியுடன் வணிக வளாகம் ஒன்றிற்குச் சென்று, பின்னர் மோட்டர் சைக்கிளில் வீடு திரும்பியபோது, லொறி ஒன்று இவர்களை மோதுவது போல் சென்றுள்ளது. இதனால், மோட்டர் சைக்கிளில் இருந்து அவர்கள் தவறி விழுந்துள்ளனர். இதனைத் தொடர்ந்து, லொறி சாரதி திடீரென துப்பாக்கியை எடுத்து கவினை தனது மனைவியின் கண் முன்னே சுட்டுள்ளார். இதில் கவின் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

இஸ்ரேல்

மூன்றிடங்களில்

## இஸ்ரேல் தாக்குதல்



இஸ்ரேல் - ஹமாஸ் இடையேயான மோதலில், இஸ்ரேல் இராணுவம் ஒரே சமயத்தில் காசா, லெபனான், ஏமன் என மூன்று பகுதிகளிலும் தாக்குதல் நடத்தியுள்ளது. இஸ்ரேல் மீது பலஸ்தீன ஆதரவு ஹமாஸ் அமைப்பு கடந்த ஆண்டு தாக்குதல் நடத்தியதோடு, சில இஸ்ரேலியர்களை கடத்தி சென்றனர். இதனைத் தொடர்ந்து இஸ்ரேல் - ஹமாஸ் இடையே போர் ஏற்பட்ட நிலையில், இஸ்ரேல் இராணுவம் காசாவிற்குள் புகுந்து வான்வழி மற்றும் தரை வழித் தாக்குதல்களை நடத்த தொடங்கியது.

இதனால் ஹமாஸ் கிளர்ச்சியாளர்களுடன், பொதுமக்களும் சேர்த்து 38 ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் கொல்லப்பட்டுள்ளனர். தற்போது இஸ்ரேல் இராணுவம், பலஸ்தீன மக்கள் தஞ்சமடைந்துள்ள ரபா நகரையும் தாக்கி வருகிறது. மேலும், ஹமாஸூக்கும், பலஸ்தீனத்திற்கும் ஆதரவாக ஏமனில் செயல்பட்டு வரும் ஹவுதி கிளர்ச்சியும், லெபனானை சேர்ந்த ஹிஸ்புல்லா அமைப்பும் இஸ்ரேல் மீது இரு நாட்டு எல்லைகளில் இருந்தும் தாக்குதல்களை நடத்தி வருகின்றனர்.

இந்நிலையில் இதற்கு பதிலடி நடவடிக்கையில் இறங்கிய இஸ்ரேல் இராணுவம் நேற்று ஒரே நாளில் காசா, லெபனான், ஏமன் எல்லைகள் உட்பட 3 இடங்களிலும் தாக்குதலை நடத்தியுள்ளது.

சென்னை

பங்களாதேசில் சிக்கிய தமிழர்களை

## அழைத்து வர நடவடிக்கை



பங்களாதேஷில் இருந்து தாயகம் திரும்ப முடியாமல் சிக்கியுள்ள தமிழர்களை அழைத்து வர நடவடிக்கை எடுக்கப்படும் என தமிழக அரசு உறுதி அளித்துள்ளது.

பங்களாதேஷில் அரசுக்கு எதிராக மாணவர்கள் நடத்தும் போராட்டத்தில் வன்முறை ஏற்பட்டு, நூற்றுக்கும் மேற்பட்டோர் பலியானதையடுத்து, அங்கு தமிழக மாணவர்கள் பலர் தவித்து வருகின்றனர். மேலும், தமிழக மாணவர்களை கல்லூரி பஸ் மூலம் அந்நாட்டு எல்லையில் இறக்கிவிட்டுச் சென்றதாக தகவல் வெளியானது.

இது குறித்து தமிழக அரசு வெளியிட்டுள்ள அறிக்கையில், "பங்களாதேசில் இருந்து தாயகம் திரும்ப முடியாமல் சிக்கியுள்ள தமிழர்களை அழைத்து வர நடவடிக்கை எடுக்கப்படும். முதற்கட்டமாக 2 விமானங்கள் மூலம் 35 தமிழர்கள் தாயகம் திரும்பவுள்ளனர்.

விமான நிலையத்தில் இருந்து அவரவர் சொந்த ஊருக்கு அனுப்பி வைக்கப்படுவார்கள். 2ஆம் கட்டமாக 60 பேரை அழைத்து வர நடவடிக்கை மேற்கொள்ளப்படும். முதல்வர் ஸ்டாலின் அறிவுறுத்தல் படி, இந்திய தூதரகத்தின் ஒத்துழைப்போடு தமிழர்களை மீட்க முயற்சி எடுக்கப்பட்டு வருகிறது" என அதில் கூறப்பட்டுள்ளது.

திருமங்கலம்

தகாத உறவால்

## மாமியாரை கொலை செய்த மருமகள்

தன் தகாத உறவு குறித்து தெரிய வந்ததால், கள்ளக் காதலனுடன் சேர்ந்து மாமியாரை மருமகள் கொலை செய்த சம்பவம் மதுரையில் இடம்பெற்றுள்ளது.

மதுரை மாவட்டம் திருமங்கலம் அடுத்துள்ள வாகைக்குளம் கிராமத்தைச் சேர்ந்தவர் காசம்மாள் (70). வீட்டில் தனியாக வசித்து வந்த இவர், ஜூலை 8ஆம் திகதி கொலை செய்யப்பட்டு கிடந்துள்ளார். அவர் அணிந்திருந்த நகைகள் கொள்ளையடிக்கப் பட்டிருந்தன. நகைக்காக கொலை நடைபெற்றதாக பொலிஸார் வழக்குப் பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு வந்தனர்.

இதனிடையே சந்தேகத்தின் அடிப்படையில் அவரின் மருமகளிடம் விசாரணை நடத்திய போது, திருமணத்துக்கு மீறிய உறவில் ஈடுபட்டிருந்த தன்னை, மாமியார் கண்டித்துள்ள நிலையிலேயே, மாமியாரை கொலை செய்துள்ளதாக கூறியுள்ளார்.

மலப்புரம்

நிஃபா வைரஸுக்கு

## 14 வயது சிறுவன் பலி


கேரளாவில் முந்தைய காலங்களில் பெரும் உயிரிழப்புகளை ஏற்படுத்திய நிஃபா வைரஸ் மீண்டும் பரவத் தொடங்கியுள்ளதாக கூறப்படுகின்றது.

வௌவால்களால் பரவும் இந்த வைரஸ் கடந்த 2018, 2021 மற்றும் 2023ஆம் ஆண்டுகளில் கோழிக்கோடு மாவட்டத்தில் அதிகம் பரவியது, 2019ஆம் ஆண்டில் எர்ணாக்குளம் மாவட்டத்தில் அதிகம் கண்டறியப்பட்டது.

கேரளாவில் ஆண்டுதோறும் மழைக்காலங்களில் நிஃபா வைரஸின் தாக்கம் காணப்படுகிறது.

அந்த வகையில் தற்போது கேரளாவில் மலப்புரம் மாவட்டத்தில் உள்ள பாண்டிக்காடு என்ற கிராமத்தை சேர்ந்த 14 வயது சிறுவன் நிஃபா வைரஸுக்கு பலியாகியுள்ளான்.

சமீபத்தில் சிறுவன் காய்ச்சல் உள்ளிட்ட அறிகுறிகளோடு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட நிலையில், சிறுவனின் இரத்த மாதிரிகள் புனேவில் உள்ள தேசிய வைராலஜி நிறுவனத்திற்கு அனுப்பப்பட்டு தொற்று உறுதி செய்யப்பட்டது.



எமிரேட்ஸ் ஆணழகன் போட்டியில்

## ராஜ்குமார் முதலிடம்

ஐக்கிய அரபு அமீரகத்தின் புஜைராவில் நடைபெற்ற டிப்பா கிளாசிக் எமிரேட்ஸ் ஆணழகன் போட்டியில், 80 கிலோ கிராம் பிரிவில் மலையகத்தை சேர்ந்த மாதவன் ராஜ்குமார் முதலாமிடத்தைப் பெற்றுக்கொண்டார்.

புற்றுநோயால் பாதிக்கப்பட்ட பெற்றோரின் பிள்ளைகளுக்கு

## கிரிக்கெட் உபகரணங்கள்



சிவாணி ஸ்ரீ

புற்றுநோயால் பாதிக்கப்பட்ட பெற்றோரின் கிரிக்கெட் விளையாடும் பிள்ளைகளுக்கு உபகரணங்களை இந்திரா புற்றுநோய் அறக்கட்டளையுடன் இணைந்து இலங்கை கிரிக்கெட் அறக்கட்டளை வழங்கி வைக்கும் நிகழ்வானது அறக்கட்டளையின் தலைவர் நவீன் திஸாநாயக்க தலைமையில், இலங்கை கிரிக்கெட் சபையின் கேட்போர் கூடத்தில் திங்கட்கிழமை(15) நடைபெற்றது.

நாடு முழுவதுமுள்ள கிட்டத்தட்ட 500 பிள்ளைகளுக்கு ஆதரவை வழங்கும் 'தைரியத்தின் குழந்தைகள்' திட்டத்தின் மற்றொரு படியாக இந்த வேலைத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

கிரிக்கெட்டில் ஈடுபடும் குழந்தைகளின் தேவைகளை உணர்ந்து, இத்திட்டத்தில் ஈடுபடும் ஒவ்வொரு குழந்தைக்கும் 100,000 ரூபாய் பெறுமதியான கிரிக்கெட் உபகரணங்களை இலங்கை கிரிக்கெட் அறக்கட்டளையின் ஊடாக நன்கொடையாக வழங்குகிறது.

நாடளாவிய ரீதியில் உள்ள பாடசாலைகளைச் சேர்ந்த கிரிகெட் வீரர்களான இவர்கள் இந்த கிரிக்கட் விளையாட்டில் தமது திறமைகளை சிறப்பாக வெளிப்படுத்திய திறமையான வீரர்களாவர்.

இதன்போது கருத்து தெரிவித்த நவீன், "கிரிக்கெட் விளையாட்டு எப்போதும் ஏனைய விளையாட்டை விட மேலானது. இது தனிமனித தன்மையையும் சமூகத்தையும் கட்டியெழுப்புவதற்கான வழிமுறையாகும்.

இந்தத் திட்டம் பிள்ளைகளுக்கு தேவையானவற்றை வழங்குவதோடு மட்டுமல்லாமல், அவர்கள் முகம் கொடுக்கும் பொருளாதாரச் சிரமங்களை எதிர்கொள்ளும் சக்தியாகவும் அமைகிறது" என குறிப்பிட்டார்.



## திரும்புகிறார் கன்டே?

இங்கிலாந்து பிரீமியர் லீக் கால்பந்தாட்டக் கழகமான செல்சியின் முன்னாள் மத்தியகளவீரரான என்கலோ கன்டேயை சவூதி அரேபியக் கழகமான அல் இத்திஹாட்டிலிருந்து கைச்சாத்திடுவதற்கு இன்னொரு பிரீமியர் லீக் கழகமான வெஸ்ட் ஹாம் யுனைட்டெட்டானது வாய்மொழி மூலமாக இணங்கியுள்ளதாகக் கூறப்படுகிறது.

யூரோ போட்டிகளில் 33 வயதான கன்டே சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தியமை குறிப்பிடத்தக்கது.

## மூவருக்குத் தடை




கனடாவில் நடைபெறவுள்ள குளோபல் இருபதுக்கு-20 தொடரில் விளையாடுவதற்கான தடையில்லாச் சான்றிதழை ஷகீன் ஷா அஃப்ரிடி, பாபர் அஸாம், மொஹமட் றிஸ்வானுக்கு வழங்க பாகிஸ்தான் கிரிக்கெட் சபை மறுத்துள்ளது.

இங்கிலாந்தின் த ஹன்ட்ரட் தொடரில் விளையாட நசீம் ஷாவுக்கும் தடையில்லாச் சான்றிதழை வழங்க பாகிஸ்தான் கிரிக்கெட் சபை மறுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

கிழக்கு கபடி போட்டியில்

## நிந்தவூர் மதீனா சம்பியன்

எஸ்.அஷ்ரப்கான்

கிழக்கு மாகாண பாடசாலைகளுக்கிடையிலான கபடிப் போட்டியானது நிந்தவூர் பொது மைதானத்தில் செவ்வாய்க்கிழமை (16), புதன்கிழமை (17) நடைபெற்றபோது, நிந்தவூர் மதீனா 17 மற்றும் 20 வயது பிரிவுகளில் சம்பியனானது.

இவ்விரண்டு பிரிவுகளிலும் அல் அஷ்றக் தேசிய பாடசாலையையே மதீனா வென்று சம்பியனானது.



விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் திங்கட்கிழமை 22, ஜூலை 2024, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.